முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மாலாங்கன் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

28.05.2019, செவ்வாய்க்கிழமை

1. **அருள் வடிவாக மக்களை நோக்கி**
**ஆசி தருகின்ற அரங்க ஞானியே**
**பொருள் வளம் கூடி மக்கள் சிறக்க**
**புண்ணிய வழி காட்டும் தவசியே**
2. தவசியே உன் பெருமை கூறி
தரணியிலே **விகாரி விடை திங்கள்**
**அவசியமுற முன்னான்கீர் திகதி குசன் வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 14ம் நாள் 28.05.2019, செவ்வாய்க்கிழமை)**
**அறிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசியை**
3. **ஆசியை மாலாங்கன் யானும்**
அருளுவேன் உலகோர் நலம் பெற
பேசிட அரங்க ஞானி காட்டும்
பேதமிலா ஞானவழிகள் தன்னை
4. தன்னிலே உலக மக்கள் ஏற்று
தவராசனுனை வணங்கி வருக
மண்ணுலகில் ஞானிகள் ஆசி
மகத்துவமுற இயற்கை பலமும்
5. பலமான பருவமழை பசுமை வளம்
பால் பசு நீர் நில வளம் குன்றா
வளமான சூழல் உருவாகும்
வையகமே வளர்ச்சி காணும்
6. காணுகின்ற கையூட்டு எனும்
களவானித்தனங்கள் விலகி
ஞானவானாக அதிகார வர்க்கம்
நம்பகம் தரும்படி மாறக் கூடும்
7. கூடவே அரங்கன் அவதாரம்
குடில் அருளமுதின் மகத்துவம்
நாடவே அதிகார வர்க்கம் உணர
நல்சிந்தை பரவி மாற்றம் காண்கும்
8. காண்கவே கடமைகளை செய்ய
கண்ணியமிழந்து கையூட்டை
மேன்மை என பெறுபவரும் கூட
மேலான அரங்கன் பார்வைபட
9. பார்வையோடு ஞான தயவு கிட்ட
பகட்டான தீதான உலக வாழ்வை
நேர்மையிலா நெறிமுறையை விட்டு
நிலவுலகோர் மாற்றம் காண்பர்

10. காண்பர் தெளிவு திடம் வளம்
கட்டாயம் சத்தியநெறி ஏற்று
ஆன்மீக ஞான ஆட்சி காலமாக
அரங்கன் வழி மக்கள் வந்து மாற்றுவர்

11. மாற்ற வந்த வள்ளலே ஞானியே
மாதவசியே ஆறுமுக அரங்கா
ஏற்று உன் வழி உலகோர் வர
எல்லாம் வெற்றியாக மாறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் மாலாங்கன் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

எல்லையில்லா கருணையுடன் அருளே வடிவாக நின்று அருள் ஞான தேசிகனாக ஆசிகளை அருளுகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமாய் மக்களின் வாழ்வினிலே பொருள் வளம் பெருகி மக்களெல்லாம் சிறப்புடன் வாழ புண்ணிய வழியினை காட்டுகின்ற மகா ஞானதவசியே எல்லையில்லா உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் வைகாசி மாதம் 14ம் நாள் 28.05.2019, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே மாலாங்கன் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மாலாங்கன்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற பேதாபேதங்கள் அற்ற சமத்துவ ஞானவழிகளினை உலக மக்களெல்லாம் ஏற்றுக் கொண்டு சற்குருவாய் அருளுபதேசம் அருளி நிற்கும் தவராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை வணங்கி வரவர, அவரெல்லாம் அரங்கன் அருளால் புண்ணியபலம் பெருகி ஞானபலம் பெருகி சிறப்பதோடு ஞானிகளின் ஆசியினை இவ்வுலகம் பெற்று பருவமழை தவறாது பெய்து நாடெங்கும் பசுமை வளம் பெருகும், பால் உற்பத்தி பெருகும், பசுக்கள் ஆரோக்கியமாக பாதுகாப்புடன் வாழும். நீர் வளமும், நிலவளமும் பெருகிடும். உலகத்தில் வளம் மிக்க நல்ல சூழ்நிலை உருவாகும். இவ்வுலகமே நல்ல முன்னேற்றம் அடையும்.

உலகினில் தற்சமயம் நிலவி வருகின்ற தமது கடமைகளை செய்வதற்கே கையூட்டு அளிக்க வேண்டும் எனும் களவானித்தனங்கள் எல்லாம் இனி விலகி அதிகாரவர்க்கத்தில் உள்ளோர் ஞானிகள் ஆசியால் ஞானவான்களாக மக்கள் நம்பிக்கையை பெற்றவர்களாக மாற்றம் அடையும் வாய்ப்புகள் அதிகமாக உருவாகிடும்.

குடிலின் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் அளிக்கின்ற அன்னதானமாகிய அருளமுதின் மகத்துவத்தினை அதிகார வர்க்கத்தினர் உணர்ந்து அரங்கன் தர்மம் வளர உதவிடுவார்களேயானால் அதிகார வர்க்கத்தினரிடத்து உள்ள தீமை பயக்கும் சிந்தனைகள் எல்லாம் மாறி நல்ல சிந்தனைகள் உருவாகி நாடே மாற்றம் அடையும்.

கடமைகளைச் செய்ய கண்ணியம் இழந்து கையூட்டு பெறுவதை மேன்மையாகவும் உரிமையாகவும் எண்ணி மதியிழந்து பெறுபவர்கள் கூட, மேன்மைமிக்க மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருள் பார்வையில் பட்டுவிட, அரங்கரின் ஞானதயவு கிடைத்திட பகட்டுமிக்க தீமையான உலக வாழ்வை விட்டு விலகி நேர்மையிலா நெறிமுறைகளை விட்டுவிட்டு நல்ல மாற்றங்களை அடைந்து சிறப்பான வாழ்வை நல்வாழ்வை வாழ்வார்கள். மனத்தெளிவினை அடைந்து மனோதிடம், அறிவு திடம் பெறுவார்கள். அவரெல்லாம் அரங்கரின் சத்தியநெறிகளை ஏற்றுக் கொண்டு அரங்கரின் தூயநெறியில் பின் தொடர்ந்து இவ்வுலக ஆட்சியை ஆன்மீக ஞானஆட்சி காலமாக ஞானயுகமாக மாற்றுவார்கள்.

**கலியுகத்தை ஞானயுகமாக யுகமாற்றம் செய்ய அவதரித்த அவதார வள்ளல் ஞானி அரங்கமகா தேசிகனே மகா தவசியே உமது வழியை மக்கள் ஏற்றுக் கொண்டு உம்மை பின்தொடர எல்லாம் வெற்றியாகவே நடக்கும்** எனக் கூறுகிறார் மகான் மாலாங்கன்.

–சுபம்–